**அறநாயக்க பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 16 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அறநாயக்க பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பொதுக் களஞ்சிய இருப்பு ரூபா 75,690 தொகை மற்றும் மின் உபகரணங்களின் இருப்பு ரூபா 46,409 தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் இறுதியிருப்பாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது வைப்புக் கணக்கில் வரவு மற்றும் செலவின விடயங்களில் செலவு வைக்க வேண்டிய ரூபா 10,420 தொகை செலவின விடயத்தில் வரவும் பொது வைப்புக் கணக்கில் செலவும் வைக்கப்பட்டமையினால் ஆண்டின் மிகை ரூபா 20,840 குறைவாகவும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்பு அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபை நிதியம் - 2017 இன் கீழ் நிறைவேற்றப்பட்ட 04 நிர்மாணங்களின் பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 587,073 ஆக இருந்த போதிலும், உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 630,718 தொகை கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மூலதன மானியம் மற்றும் மூலதனச் செலவினம் என்பன ரூபா 43,645 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 05 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 93,466,333 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 104,040,343 ஆனமையால் ரூபா 10,574,010 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

14 வருடங்கள் முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 672,333 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,938,926 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 28,461 ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2010 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டம் | 6,000 | சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்பட்ட இரண்டு கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 104, 105 மற்றும் 110 | 429,095 | சபைக்குச் சொந்தமான தண்ணீர் பவுசருக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக அறிக்கையிடப்படாதிருந்ததுடன் வாகனத்தின் நட்ட இழப்புப் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 | 99,000 | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 07 முற்பணங்களைத் தீர்க்கும் போது 06 நாட்கள் முதல் 27 நாட்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | வரையிலான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. |
| | | 40,983 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 தீர்க்கப்படாத முற்பணங்கள் காணப்பட்டன. |
| | (iii) நிதிப்பிரமாணம் 1645(அ) | - | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களுக்குரிய சம்பவத் திரட்டு புத்தகம் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சபரகமுவ மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சுற்றறிக்கை | 112,242 | விற்பனை செய்யப்படாத காணிக் கூறுகளுக்குரிய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,764,751 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,011,086 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,757,000 | 1.719,148 | 1,764,726 | 250,165 | 1,742,000 | 1,729,480 | 2,214,006 | 424,374 |
| வாடகை | 1,823,500 | 1,708,480 | 1,742,332 | 118,027 | 1,265,700 | 1,510,310 | 1,563,869 | 152,779 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,090,000 | 1,222,977 | 1,235,367 | 360 | 880,100 | 1,131,379 | 1,123,679 | 14,150 |
| ஏனைய வருமானம் | 45,147,560 | 76,776,923 | 31,453,050 | 28,729,210 | 49,031,800 | 46,378,557 | 31,871,808 | 19,131,208 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 105 ஆதனவரி ஆதனங்களிலிருந்து 02 வருடம் முதல் 29 வருடங்கள் வரை ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2000 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சபைக்குச் சொந்தமான 04 ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதன் அடிப்படையில் அறவிட வேண்டியிருந்த ரூபா 93,743 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பழைய கிராம சபைக் (கம்சபா) கட்டிடத்தை வாடகைக்கு வழங்கியதன் அடிப்படையில் மாதமொன்றிற்கு அறவிட வேண்டிய ரூபா 5,000 தொகையான வாடகை 2014 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 242,500 தொகை அறவிட வேண்டியிருந்தது. வாடகை செலுத்தாமையின் அடிப்படையில் கட்டிடத்தை சபைக்கு கையளிக்குமாறு 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது வாடகையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2017 ஆம் ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கக் கூடிய 09 வியாபார நிறுவனங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

**விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 40 நிலையான விளம்பர அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 57,850 தொகையும், 17 தற்காலிக அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 7,312 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 4,371,500 மற்றும் ரூபா 21,039,510 ஆக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள்

மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு பணிகளும் குறித்துரைக்கப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருந்ததா என மேற்பார்வை செய்யப்படாதிருந்ததுடன் 05 பணிகள் 2018 மார்ச் வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிறைவேற்றப்படாத இலக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் உத்தேசிக்கப்பட்ட ரூபா 700,000 தொகையான 04 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 இன் தெயட கிறுல (தேசத்திற்கு மகுடம்) செயற்திட்டத்தின் கீழ் ரூபா 850 இலட்சம் நிதிஏற்பாட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட திப்பிட்டிய மத்திய சந்தைத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் 2016 திசெம்பர் இல் நிறுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டமையால் படிக்கட்டுக்களிலும், கொங்கிறீட் கட்டுக்களிலும் (பீம்) திறந்ததாகக் காணப்பட்ட இரும்புக் கம்பிகள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் மாதமொன்றிற்கு அண்ணளவாக 52 தொன் கழிவுப்பொருட்களின் அளவு மாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்ட காணியொன்றிற்குள் போடப்பட்டிருந்தது. அதற்காக வாடகையாக மீளாய்வாண்டின் போது ரூபா 535,484 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) முறையற்ற வகையில் துண்டுக் கழிவுப்பொருட்கள் போடப்பட்டிருந்ததுடன் உயிரினங்களின் பாகங்கள், பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து அகற்றப்பட்டவைகள் ஆங்காங்கே குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(iii) கலிபவுசரிலிருந்து கழிவுப்பொருட்களை போடுவதற்கான காணியொன்று அல்லது நிலமொன்று உடையவர்களுக்கு மாத்திரம் கலிபவுசர் சேவை வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான நிலமொன்று காணப்படாத நகர மக்களுக்கு அந்த வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(iv) 2017 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக காணியொன்றைக் கொள்வனவு செய்தல் மற்றும் மே மாதத்தின் போது அதற்கான செயற்திட்ட அறிக்கையைத் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், 2018 மார்ச் வரையிலும் அந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

------------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 1,105,808 தொகையான கழிவுப் பாத்திர விற்பனை வருமானம், விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு வழங்கிய கட்டணம், கலிபவுசர் சேவைக் கட்டணம் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் மரங்களை அகற்றும் கட்டணம் என்பன 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் உள்ளூராட்சி நிதியுதவியாக 2009 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 41,628 தொகை பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) இலத்திரனியல் நூலக சேவை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டின் போது உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

----------------------------------------------

சபையின் 07 வகைப் பதவிகளில் 07 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இரண்டு பதவி வகைகளி ஊழியர் மிகை 03 ஆகக் காணப்பட்டது. சபைக்குச் சொந்தமான முன்பள்ளி பாடசாலை ஆசிரியர், பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், முன்பள்ளி பாடசாலையொன்றை நடாத்திச் செல்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------------------

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய காணிகளில் 42 அனுமதியற்ற நிர்மாணங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ சபை செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய 12 மயான நிலங்களின் மொத்தப் பரப்பளவு 12 ஏக்கர் 03 றூட் 25 பேர்ச் அளவாக இருந்ததுடன் இந்த நிலத்தை அளவீடு செய்து உரிய பதிவேடுகளில் கொண்டுவரப்படாதிருந்ததுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளாமை**

சொத்துப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட 256 கிணறுகள் உரிய பிரகாரம் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும், அந்தக் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 100 சதுரஅடி முதல் 750 சதுர அடி வரையிலான காணிப்பகுதி பொதுப் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படுகின்றதா எனவும் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை**

சபைக்குச் சொந்தமான 10 விடுதிகளுக்குரிய அவற்றின் கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் விடுதிகளுக்குரிய காணியின் பெயர் மற்றும் அதன் பரப்பு என்பன பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அந்த விடுதிகள் பொதுப் பயன்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்தப்படவில்லை.

**3.4.4 கையேற்கப்படாத சொத்துக்கள்**

சபை பயன்படுத்துகின்ற 20 வாகனங்களில் 11 வாகனங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.5 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

செயற்பாடற்ற 03 வாகனங்களுக்காக பொருள் மெய்மையாய்வின் சிபாரிசுகள் அமுல்படுத்தப்படவில்லை. செயற்படு நிலையில் காணப்படுகின்ற 17 வாகனங்களுக்காக 04 சாதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றமையால் சொத்துக்கள் குறைவாக பயன்படுத்தப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 39 விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 823,200 தொகையான நிதிஏற்பாடு 100 சதவீதமும், 41 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 5,682,408 தொகையான நிதிஏற்பாடுகளில் 40 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கு இடையிலுமாக கூட்டுமொத்தமாக ரூபா 6,505,608 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | தொங்கல் கணக்கு தீர்க்கப்படாமை |
| | (ii) | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | (iii) | நாட்குறிப்புக்களுக்கான விளக்கக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுபாடு | | கவனத்தில் கொள்ளக் கூடிய நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை. |
| (இ) வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | | வாடகை உரிய காலத்தில் மதிப்பீடு செய்யப்படாமை |
| (ஈ) வாகனப் பயன்பாடு | (i) | நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை |
| | (ii) | செயற்பாடற்ற மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கான வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை |